**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.70/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தணிகாசலம் | மதம் | : இந்து |
| த/பெ | : பக்தவச்சலம் | ஜாதி | : -- |
| வயது | : 44 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் | : MRF ஒப்பந்த பணியாளர் | வட்டம் | : திருத்தணி |

**25.06.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

9. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விபரத்தில் வீடு இருப்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். A,B, C அட்டவணைச் சொத்துக்களின் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.இந்த வழக்கு சொத்து எனக்குதான் சொந்தம் என்பதை காட்ட என் பெயரிலுள்ள உரிமை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அடங்கல் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். அடங்கல் யார் பெயரிலுள்ளது என்றால் கண்ணம்ம நாயுடு பெயரில் உள்ளது.

10. வா.சா.ஆ.1 அடங்கலில் உள்ள கண்ணம்ம நாயுடுவின் இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கண்ணம்ம நாயுடுவுக்கு உறவு என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பாவின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சொத்து குறித்து எனக்கும் பிரதிவாதிகளுக்கும் 10, 15 வருடங்களாக பிரச்சனை இருக்கும் என்றால் 10 வருடங்களாக பிரச்சனை இருக்கிறது. என் அப்பா இருந்தபோதே பிரச்சனை இருக்கிறது.

11. இந்த வழக்கில் உரிமை பிரச்சனை உள்ள நிலையில் உறுத்துக் கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ளது செல்லாது என்றாலும் நான் உரிமை விளம்புகை

கேட்டிருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள தேதியிலோ அல்லது அதற்கு முன்போ வழக்கு சொத்து என் அனுபவத்தில் இருந்ததை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் எனக்கு எந்தவித உரிமையோ சம்மந்தமோ இல்லை என்றாலும் நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை.)